# MEGA add


The Official Magazine:
JAFFNA MEDIA SOLUTIONS (PVT) LTD.
The Gateway to the Largest Market...
T.P.: 021 225 0378
011 724 4333
Fax: 021 225 0378
e-mail: jaffna2media@gmail.com

June 2012 | Monthly Magazine | Issue - 01


Free Issue


# விவாஹாலய்

## அழைப்பிதழ்கள்

- அழைப்பிதழ்கள்
- விளம்பரப் பதாகைகள்
- டிஜிட்டல் பனர்கள்
- பரிசுப் பொருட்கள்
- கேடயங்கள் மற்றும் பதக்கங்கள்
- வேலை அடையாள அட்டைகள்



நம்ம வீட்டு இளவரசிக்கு கல்யாணம்!

இல: 273,275, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.போதனா வைத்தியசாலையின் பின்புறம்)
CALL: 021 221 9999

web : www.vivahas.com | e-mail : vivahascards@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**Twice daily to Colombo.**
தினமும் கொழும்புக்கு இரு சேவைகள்.

**Book online.**
இணையத்தளத்தின் ஊடாகப் பதிவுசெய்யலாம்.

**Available for Charters.**
வாடகைச்சேவைகளையும் பெறலாம்.

# ExpoAir
*your friend in the skies...*

## EXPO AVIATION (PVT) LTD

No. 14 F, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel : 021 - 222 3891 / 222 6297
e-mail : Jaffna@expoavi.com
Mob.: 077 260 1072

No. 6, Joseph Lane, Colombo - 4.
Tel : 2555156-9 / 2555167- 8,
e-mail : reservations@expoavi.com
Mob.: 077 265 9945



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்யம், சிவம், சாய் பாபா

பாபாவின் பக்தர்களுக்குப் பாபா சந்தேகத்துக்கு எல்லாம் அப்பாற்பட்டவர். அவர் தான் கடவுள்; உலகம்; எல்லாம். ஆனால், அவரை நம்பாதவர்களுக்கு ஆயிரம் கேள்விகள் உண்டு. சந்தேகங்கள் உண்டு. அவற்றுக்கான விடைகளைத் தருவதற்கே சத்யம், சிவம், சாய்பாபா!

**சத்ய சோதனை**

சத்யா 14 வயதுச் சிறுவன். பார்ப்பதற்கு அழகாக இருப்பான். அதுவும் புஷ் என்ற அவனது தலைமுடி பார்க்க மிகஅழகாக, களையாக இருக்கும்.

சத்யாவின் அற்புதங்கள் வெளியில் தெரியத் தொடங்கிய நேரம்; அவன் மௌனத்திலேயே பெரும் நேரத்தைக் கழிப்பான். திடீர் திடீரெனப் பாடல்களை இயற்றி இனிமையான குரலிற் பாடுவான். மக்கள் விழிப்புணர்வுடனும், கல்வியறிவுடனும் இருக்கவேண்டும் என்ற அர்த்தத்தில் அந்தப் பாடல்கள் இருக்கும். கல்வி கற்காவிட்டாற் சுலபமாக ஏமாற்றப்படுவார்கள் என்ற கருத்தை வலியுறுத்திப் பாடுவான். உயரிய வேதாந்தக் கருத்துக்களைச் சொல்ல ஆரம்பிப்பான். திடீரெனக் கட்டைபோல் மூச்சுப் பேச்சின்றிப் படுத்துக் கிடப்பான்.

சட்டென்று எழுந்து "அதோ தெய்வங்கள் வான்வெளியிற் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஆரத்தி எடுங்கள்" என்று ஆகாயத்தைப் பார்த்தபடி சத்தமிடுவான்.

அதுமட்டுமன்றி, தன் வயதையொத்த நண்பர்களுக்கு; பூ, பழம், திண்பண்டம் என்று அவர்கள் கேட்பவற்றை எல்லாம் மாய மந்திரம்போல் வரவழைத்துக் கொடுத்தான்.

ப்ரியா கல்யாணராமன்

(அடுத்த வெளியீட்டில்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நம்பிக்கை நிறைந்த ஒருவர்; யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை**

- ஏ. பி. ஜெ. அப்துல் கலாம் -

மெகா விளம்பர சஞ்சிகையின் முதலாவது வெளியீட்டில் வாசகர்களாகிய உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது இந்தப் புதியப் முயற்சிக்கு ஆதரவுதந்த விளம்பரதாரர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக; எமக்கு ஊடகத் துறையைக் கற்றுத்தந்து, எம்மை அத்துறையில் வளர்த்தெடுக்க வலம்புரி நாளிதழ் குடும்பத்தினர் ஆற்றிய பங்களிப்புச் சொல்லில் அடக்கிவிட முடியாதவை. இருந்தும் நன்றி நவில்வது தமிழன் பண்பு என்பதற்கிணங்க; அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மெகா விளம்பர சஞ்சிகை விளம்பரங்களை மட்டும் தாங்கி வராமல்; வாசகர்களுக்குப் பயன்தர வல்ல பல ஆக்கங்களையும், தகவல்களையும் கொண்டுள்ளது. அத்துடன் அடுத்துவரும் வெளியீடுகளில் வாசகர்களுடைய ஆக்கங்களும் பிரசுரிக்கப்படும்.

எமது வளர்ச்சிக்கு வாசகர்களே உங்களுடைய பயன்தரு ஆலோசனைகளைத் தெரிவித்துக்கொள்ளுங்கள். உங்கள் விமர்சனங்களே எங்களது வளர்ச்சிக்குப் படிக்கற்களாகும்.

தமிழர் பிரதேசத்தில் இருந்து வெளிவரும் வழிகாட்டியாக மெகா உங்கள் கைகளில் தவழ வருகின்றது.

இது தமிழ்பேசும் மக்களிடம் உறவாட வருவதுடன் மெகா வர்த்தகர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக; ஒரு மாறுபட்ட இதழாக அமையப்போகின்றது.



தோழமையுடன்,
ஆசிரியர்.

மெகா add

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை.
T.P.: 021 225 0378
011 724 4333
Fax: 021 225 0378
e-mail: jaffna2media@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்கள் உணர்த்தும் பண்புகள்

ஒவ்வோர் எண்ணிலும் மறைந்துநிற்கும் அர்த்தம் அல்லது சிறப்புக்கள் உண்டு. எண்கள், எழுத்துக்கள் இரண்டின் பலன்களுடன்; அவை இணைவதால் ஏற்படும் விளைவுகளுடன்; அவற்றின் சுழற்சியாலும் விளைவுகள் ஏற்படுகின்றன. அவ் விளைவுகள் மீண்டும்மீண்டும் ஏற்படும்போது அவற்றின் உண்மை உணரப்படுகிறது. அவ்வாறு உணரப்பட்டதன் அடிப்படையிலேயே எண்களின் பொதுப்பலன்கள் தரப்படுகின்றன.

## எண் 1

ஒரு மனிதன் நேர் செங்குத்தாக நிமிர்ந்து நிற்பதன் கோட்டுச் சித்திரமாகும். மனிதனைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் MAN என்பதாகும். இதனை எண் விளக்க அட்டவணைப்படி கூட்டினால் 10 ஆகும். அதில்வரும் இரு (1+0) எண்களையும் கூட்டினால் கிடைக்கும் எண் 1. இவ்வாறு அமைந்துள்ள இந்த எண்; ஆண் தன்மையின் குறியீடு ஆகின்றது.

இந்த எண்ணின் கிரகம் சூரிய பகவான் ஆகும். இதனால், இவ்வெண்ணானது உழைப்புமிக்க உன்னதமான வாழ்நாட்கள் , படைப்பாற்றல், வீரியம்,. புதிய முயற்சிகள், அறிவுக்கூர்மை, புதியன கண்டு பிடித்தல், மேதைத்தனம், தானே முதலிற் படைத்தல், விட்டுக்கொடுக்கும் பெருந்திறமை ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகின்றது.

இது அறிவின் சின்னமாகும். அதேபோன்று ஆண்மையின் அடையாளமாகவும் திகழ்கிறது. இது மாற்றங்களையும், எதையும் துணிந்து தொடங்கும் திறமையையும் குறிப்பிடுகின்றது.

புதிய நிகழ்ச்சிகள், புதிய சூழ்நிலைகள், பிரயாணங்கள் ஆகியவற்றினை ஊக்குவிக்கின்றது. இவ்வெண் இலட்சியத்தை அடைவதற்குத் தேவையான மனவுறுதியை உற்பத்தியாக்குகின்றது. தெளிவான, துல்லியமான குறிக்கோள்களின் அடிப்படையிற் செயல்களும் பணிகளும் நடைபெறச் செய்கின்றது.

ஆயினும், பொருத்தமில்லாதவருக்கு இவ்வெண் அமைந்துவிட்டால் அவர் அதிகார ஆதிக்கம் செலுத்தும் பேர்வழியாகவும், இரக்கமற்றவராகவும், சுயநலவாதியாகவும் இருப்பார். தான் கையாள்கின்ற அடக்குமுறைச் செயல்களை "கடமையைத்தான் செய்கிறேன்" என்றுகூறி, நியாயப்படுத்துபவராகவும் திகழுவார்.

## எண் 2

இரண்டு என்னும் எண் ஆனது படம் வரைவதைப்போல் முயன்றாலேதான் உருவாகின்றது. அதனால் இது நிர்மாணத்தைக் குறிக்கும் எண் ஆகும்.

முதல் இரட்டைப்படைப்பான இவ்வெண் பெண் இயல்புபெற்ற எண் ஆகும். இது பெண்களின் முதற்பிரதிநிதிபோல் விளங்குகின்றது. இதனால் இவ்வெண் உணர்ச்சிவசப்படுவதனையும், கூடுதலான உள்ளுணர்வு இருப்பதனையும் காட்டுகின்றது.

நிர்மாணிப்பதற்குப் பலவித பொருள்களைச் சேகரிக்கவேண்டியுள்ளதால்; நிர்மாண எண்ணாகிய 2; கூட்டு முயற்சியின் அடையாளம் ஆகும். ஆகவே, இது செயற்படுவதில் விரைவாகவும் உள்ளது. இந்த எண்காரர்கள் சூழ்நிலை அறிந்து நயமாகச் செயல்புரியவல்ல ராஜதந்திரிகளாவர். ஆனால் பொருத்தமில்லாதவருக்கு இந்த எண் அமைந்துவிட்டால் தயங்குபவராக, ஏமாற்றுபவராக, இரகசியமாகச் செயற்படுபவராகக் காணப்படுவார்.

இந்த எண்ணுக்குரிய கிரகம் சந்திரனாகும். பெண் சின்னமாகிய இவ் எண் குடும்ப வாழ்க்கை, பிறருக்கு உதவும் பண்பு, நிதானம் என்பவற்றுடன் உறுதி குறைவான சஞ்சலத்தன்மையையும் குறித்து நிற்கின்றது.

(அடுத்த வெளியீட்டில்...)

தமிழக சோதிடர்
K.K.சம்பத்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARRUL GLOBAL EXPRESS
## INTERNATIONAL COURIER & CARGO SERVICE

**72 மணித்தியாலத்தில்**
வெளிநாடுகளுக்கான கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை

**24 மணித்தியாலத்தில்**
இலங்கையின் சகல பாகங்களுக்குமான கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை

உங்களால் அனுப்பப்படும் பொருட்கள் உரிய இடத்தைச் சென்றடையும் வரையான தகவல்களைக் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ளலாம்.

05kg, 10kgஇற்கு மேற்பட்ட பொதிகளுக்கு அதிவிசேட கட்டணச்சலுகை.

சகல நாடுகளுக்குமான
விமானப் பயணச்சீட்டுக்கள்
மற்றும் இணைந்த சேவைகள்




இல. 1, பிறவுண் வீதி,
நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6113

# Mayil

## Digital Studio & Video

Photography
Videography
Album Making




## Mayil Beauty Care



Bridal Dressing (type of make up)
(Long ours Make up)
Structure cake icing
Facials
Rebonding
Straightning
Hair cuts
Pimple Treatment & Other Beauty Treatments
(Special Wedding Packages Available)

Veerapathirar Road,
Kondavil North, Kondavil.
Tel: 077 691 4123, 021 492 2023

Branch:
Post Box Junction,
Palaly Road, Thirunelvely.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகச் சிறந்த பழச்சாறு எது?

நோய்களைக் குணமாக்கும் பதினேழுவிதமான பழச்சாறுகளுள் அப்பிள் பழச்சாறே முதலிடத்தில் இருப்பதை ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதற்காகப் பதினேழுவகை யான பழச்சாறுகள், மென்பானங்கள் முதலிய வற்றிலுள்ள விற்றமின் C இன் அளவை மிகத் துல்லியமாகக் கணக்கிட்டனர்.

இதில் அவர்கள் கண்டுபிடித்த உண்மை அவர்க ளையும் ஆச்சரியப்படுத்தியது. காரணம்: ஒரேஞ்சுப் பழச்சாற்றிலேதான் விற்றமின் C தாராளமாக இருக்கும் என நினைத்தனர். ஆனால், அப்பிளில் ஒரு அவுன்சிற்கு மில்லிக்கிராம் வீதம் விற்றமின் C இருந்தது. இதற்குக் குறைந்தளவே ஒரேஞ்சு சாற்றில் இருந்தது.

அப்பிளைச் சாறாக மாற்றும்போது கூடுதலாக விற்றமின் C உருவாகிறதாம். எனவே, 8 அவுன்ஸ் அப்பிள் தினமும் சாப்பிட்டுவந்தாற் போதும். நீங்கள் அதிக ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்வீர்கள்.

காரணம்: விற்றமின் C போதுமான அளவு கிடைப்பதால் வளர்ச்சி மாற்றம் விரைந்து நடை பெற்று; உடலிற் கொழுப்புக்கள், விஷப் பொருட்கள் எங்கும் தங்காமல் கரைந்துவிடும்.

எனவே, அப்பிள் சாறுக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்பினால், பழத்தை நன்றாகக் கழுவி, தோலைச் சீவாமல் மிக்சியில் சாறாக்கித் தோலையும் சேர்த்து அருந்தவும். இதில் சீனி சேர்க்கக் கூடாது.

ஒறேஞ் சாற்றில் விற்றமின் C சிறிது குறைவு என்றாலும், சாறாக மாற்றி அருந்தும்போது கல்சியம், பொட்டாசியம் கூடுதலாகக் கிடைக்கின்றது. எனவே, அப்பிள் சாறு அருந்தி வருபவர்கள் ஒரு வேளையாவது ஒரேஞ்சும் அருந்தி வருதல் வேண்டும்.



# உண்மைகள்

## கால், கை வலிப்பு

மூளை அமைப்பில் ஏற்படும் கோளாறே கால், கை வலிப்புக்குக் காரணம் எனவும், பிறவியிலேயே கட்டி தோன்றி மூளை நரம்புகளிற் பலவீனம் ஏற்பட்டு இருக்கலாம். இதனாலேயே காக்காய் வலிப்பு நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் உள்ளவர்களுக்கு அத்திப்பழமும், அப்பிள்பழமும், குழந்தையாக இருந்தால் திராட்சைப் பழச்சாறும் அடிக்கடி கொடுக்க வேண்டும். அல்லது எலுமிச்சம்சாறை வெந்நீரிற் கலந்து குடிக்கக்கொடுக்க, கால், கை, வலிப்பு கட்டுப்படும்.

## தாலிக்குப் பதில் கத்தியால் குத்துகின்றனர்

நம் நாட்டில் திருமணத்தின்போது மணமகளுக்கு மணமகன் தாலி கட்டுகிறான். ஆனால், மொராக்கோ நாட்டில் வாழும் காபிலஸ் என்னும் மக்கள் மணமகளின் கழுத்தில் தாலி கட்டுவதற்குப் பதில் மணப்பெண்ணின் தொண்டையில் இலேசாகக் கத்தி முனையால் மதப்பெரியார் குத்திக் காயப்படுத்து கிறார். இரத்தத்துளிகள் சிந்தியதும், அவள் குறித்தவனை மணவாளனாக மனமுவந்து ஏற்றுக் கொண்டவளாகின்றாள். இது கல்யாணத்தின் போது தொன்றுதொட்டு நடந்துவரும் பழக்கமாகும்.

## அடக்கினால் ஆபத்து

மனிதன் எதையுமே வெளிக்காட்டினால் அவற்றுள் சில அவனுக்கு ஆபத்தாய் முடியும். அப்படியல்லா மல் அதை அடக்கினாலும் அதுவும் அவனுக்கு ஆபத்தாய் முடியுமென அண்மைக் கால ஆய்வுகள் கூறுகின்றன. இதன்படி கோபத்தை அடக்கி வைத்துக் கொண்டால் அது தலைவலி, தோளிலும் முதுகெலும் பிலும் வலி, இருதயக் கோளாறுகள், குடல் அழற்சி மூலம் பாரிசவாயு, முடக்குவாதம், திக்கல் முதலிய வை ஏற்படுமாம். அச்சத்தை அடக்கிவைத் தால் பேதி, வயிற்றுவலி முதலியவை உண்டாகுமாம். குற்ற உணர்வுகளை அடக்கிக்கொண்டால் சரும உபாதை கள், பேச்சில் குழறல்கள், மலட்டுத்தன்மை போன்ற வை உண்டாகுமாம். சந்தோஷத்தை அடக்கிக் கொண்டால் நேனாடஸ்டிஸிஸ் மரத்துப்போய் நீலம் பாரிப்பு போன்றவை ஏற்படுமாம். ஆய்வுகளின் மூலம் மேற்கண்ட தகவல்களை மருத்துவ விஞ்ஞா னிகள் வெளியிட்டுள்ளனர்.

பி. ஹரிஸ்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கும்



# மாபெரும் வேலைவாய்ப்பு...

- நீங்கள் வேலைவாய்ப்பினைத் தேடுபவரா?
- வேலை செய்ய ஆற்றல் இருந்தும் வயது ஒரு தடையென எண்ணுபவரா?
- பகுதி நேரமாக வேலைசெய்ய விருப்பமுள்ளவரா?
- துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞரா?
- குறுகிய காலத்திலேயே அதிக வருமானத்தினை உழைக்கும் ஆர்வமுள்ளவரா?
- வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் பெறுமதியை வழங்குகின்ற நிறுவனத்தில் வேலைசெய்ய வேண்டும் என்ற ஆவலா?

**உங்கள் எதிர்காலம் சிறக்க இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் கைகோருங்கள்**

**காப்புறுதித் துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு வருமான உத்தரவாதம் உண்டு.**

**உங்கள் எதிர்காலத்தினை வளமானதாக்க எம்முடன் இணையுங்கள். வாய்ப்புக்களை நழுவவிடாதீர்கள்.**

ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

**உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:**

விற்பனை முகாமையாளர்,
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 342 3913, 021 222 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Green Grass

## Hotel & Restaurant



Tel: 021 222 4385
021 222 1686
Fax : 021 222 1686

No.33, Aseervatham Lane,
Hospital Road, Jaffna.

Web: www.jaffnagreengrass.com

e-mail: greengrassjaffna@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் வாழ்வாதார உதவித்திட்டம்

யாழ்ப்பாண வணிகர் கழகம் வரலாற்றில் தடம்பதிக்கத்தக்க வகையில் வியாபார நோக்கத்திற்கு அப்பாற்சென்று மனிதாபிமான ஒரு சேவையை வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்தவும்; அதுமட்டுமன்றி பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றுவற்குமாக, வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட, பெண் தலைமைத்துவங்களைக் கொண்ட குடும்பங்களுக்குப் பல உதவிகளைச் செய்துவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டம் மட்டுமின்றி, கிளிநொச்சி மாவட்டத்திலும் இத்தகைய உதவிகளைச் செய்துள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 10 குடும்பங்களைத் தெரிவு செய்துள்ளபோதும் , யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் 15 குடும்பங்களைத் தெரிவுசெய்து அவர்களுக்கான வாழ்வாதார, பொருளாதார உதவிகளைச் செய்துகொடுத்துள்ளனர்.

இவ் உதவிகள் தொடர்பாக ஏனைய வர்த்தகர்களுக்கும், மக்களுக்கும் இத்திட்டங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் நோக்கில் Mega இலவச விளம்பரச் சஞ்சிகைக்காக வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரத்தைத் தொடர்புகொண்டு, அவரின் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

எமது மக்கள் யுத்தத்தின் பிடியிற் சிக்கி உறவுகளை இழந்தும், சொத்துக்களை இழந்தும் பாதுகாப்புத் தேடி; யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்திருந்தார்கள். இவர்களுக்கான உதவிகளை வழங்குமாறு முன்னாள் அரசாங்க அதிபர் கே. கணேஷ் கோரியிருந்தார். அன்று மெதுவாக ஆரம்பித்த எமது பயணம் 3 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் தொடர்கின்றது.

பொருளாதார ரீதியிற் பின்தங்கியவர்களாக, அவலமான வாழ்க்கையையே யுத்தத்தினாற் பாதிப்படைந்த மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். இந்த மக்களின் அவல வாழ்க்கை தொடராமல் அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான ஒரு முயற்சியாகவே ஒரு குடும்பத்திற்கு 30 கோழிக்குஞ்சுகள் மற்றும் அவற்றுக்கான ஆரம்பகாலப் பராமரிப்புக்கான தீவனங்கள் மற்றும் உபகரணங்கள், 15, 20 வருடங்கள் பயன்படுத்தக்கூடிய கூடுகள் எனச் சுமார் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்கிவருகின்றோம்.

எமது சங்கத்தின் கீழுள்ள வர்த்தகர்களிடம் இவ்வாறான உதவிகள் தொடர்பாகக் கலந்துரையாடியபோது அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டார்கள்.

வணிகர்களின் ஒத்துழைப்போடு இச் செயற்பாட்டிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காகப் பிரதேச செயலகங்கள். உதவி அரசாங்க அதிபர்களைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர்களும் ஆர்வம் கொண்டார்கள். இத் திட்டத்திற்கு உடனடியாகவே மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விரைவாகச் செயற்பட்டு, தமது பிரிவிலுள்ள 10 குடும்பப் பயனாளிகளின் பெயர் விபரங்களைத் தந்தார்கள்.

எமது இத்திட்டம் ஆடம்பரமானதல்ல. இந்தச்சிறு உதவி முழுமையாக மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பதே எமது குறிக்கோளாக இருந்தது. இத்திட்டத்தை வெற்றிகரமான முறையில் நடைமுறைப்படுத்த, தொடர்ச்சியான தொடர்பாடல் அவதானிப்புக்களையும் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றோம். பயனாளிகள் மற்றும் அவர்களது பயன்பாடு தொடர்பாகத் துறைசார்ந்த அதிகாரிகளுடன் தொடர்புபடுத்தியே இதனை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த காலங்களில் எமது பகுதி உற்பத்திகளே வெளிமாவட்டங்களுக்குச் சென்றதை யாரும் மறக்கமாட்டார்கள். இன்று நிலைமை மாறி, வெளி மாவட்டத்தை எதிர்பார்க்கவேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. எமது மக்களின் வாழ்வாதாரத்தை, பொருளாதாரத்தை நாமே கட்டியெழுப்ப வேண்டும். பிறரைச் சார்ந்து வாழாது நமது கால்களிலே நாமே நிற்கவேண்டும். இத்தகைய சுயபொருளாதாரப் பாங்கை நிலைநிறுத்துவதற்கான எமது சிறு முயற்சியாகவே இம் முயற்சி அமைகின்றது. இதற்கு உதவுவதற்கு பணம்படைத்தவர்களும், ஏனைய வர்த்தகர்களும் முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறார் யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயசேகரன்.

நாம் இத் திட்டத்தை ஆரம்பித்தபோது எமது வர்த்தகர் ஒருவர் தனது பிரதேசத்திற்கான செலவையும், மற்றுமொரு வர்த்தகர் தனது தாய் தந்தையர் ஞாபகார்த்தமாகக் கிளிநொச்சி மாவட்டத்திற்கான முழுச்செலவையும் பெறுப்பேற்றார். இவர்களை முன்மாதிரியாகக்கொண்டு ஏனைய வர்த்தகர்களும் முன்வரவேண்டும்.

அரசாங்கத்தினதோ, அரச சார்பற்ற நிறுவனங்களினதோ உதவிகள் எதனையும் பெறாது; வர்த்தகப் பெருமக்கள் தாமாக உணர்ந்து முன்வந்து இவ்வாறானதொரு மக்களுக்கான உதவிகளைச்செய்ய முன்வந்துள்ளமையானது, மக்களின் துயரங்களை வெளியுலகுக்கு எடுத்துக்காட்டி, உதவிகளைப் பெற்றுத் தம்மை வளர்த்துவரும் ஏனைய அமைப்பினருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும் என அவர் தெரிவித்தார்.

பிறந்த நாள், திருமணநாள் மற்றும் தாய் தந்தையரின் நினைவாகச் செலவுசெய்யும் பணத்தில் ஒரு சிறு பகுதியை இந்த மக்களுக்காகச் செலவிட முன்வருவோமானால் எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, யாழ் குடாநாட்டின் பொருளாதாரத்தையும் மேம்பாடடையச் செய்யலாம்.

பி.எம்.நியூட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா தொழிலகம்

அண்ணா நிறுவனத்தின்
புதியதோர் உற்பத்தி
அண்ணா நூடில்ஸ்.
உடனடித் தயாரிப்பு,
உண்ணச் சுவையான
உணவு.
அண்ணா உற்பத்தி -
விற்பனை நிலையங்களிற்
பெற்றுக்கொள்ளலாம்.




**அண்ணா தொழிலகம்,**
**இணுவில்.**
**தொ.பே.: 021 224 1565**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

இப்பொழுது சுன்னாகத்தில்
K.K.S. வீதி,
மதவடி முன்பாக
021 224 2022
071 454 6956
077 722 5292

மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் குலுக்கல்மூலம்
03 பரிசில்கள் வழங்கப்படும்.

பெண்களுக்கு
நவீன காரில் பயிற்சி
வழங்கப்படும்.







L

# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

- L வாகனப் பயிற்சிகள் சுன்னாகக் கிளையிலிருந்து ஆரம்பிக்கப்படும்.
- L குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாகச் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- L எழுத்துப்பரீட்சையிற் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- L ஞாயிற்றுக்கிழமைகளில் மருத்துவ சான்றிதழ் (மெடிக்கல்), புகைப்படம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- L அனுபவம் வாய்ந்த வாகனப் பயிற்றுனர்களால் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- L தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப்பயிற்சி வழங்கப்படும்.
- L தவணைமுறைக் கட்டணங்கள்.
- L வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்குப் பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரமும் வழங்கப்படும்.

# KIRUBA LEARNERS

(Govt.Approved Driving Training School)

தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 492 3200

## எமது கிளைகள்:

| A9 வீதி, சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | விசுவமடு |
|---|---|---|---|
| 021 227 0700 | 021 300 6550<br>021 492 3201 | 021 228 5505 | 021 320 1515 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூக்கடைப்பு

மூக்கடைப்பானது இரண்டு முக்கிய காரணங்கள் ஜலதோஷம் எனப்படும் தடிமனும், சைனஸைட்டிஸ் எனப் படும் புரையழற்சியும்தான். ஜலதோஷம் தும்மலையும், மூக்கு ஒழுகுவதனையும் ஏற்படுத்துகின்றது. இது நாசியினுள் இருக்கும் சீதச்சவ்வினை அழற்சியுறச்செய்து விடுகிறது. இதனால் அப்பகுதியிலுள்ள நாளங்கள் விரிவடைகின்றது. இவ்வாறு நாளங்கள் விரிவடைவதனால் மூக்கிலுள்ள இடைவெளி குறைந்து தேவையான அளவு காற்று எளிதாக நாசியினுட் சென்று வெளிவர இயலாது போகின்றது. இதனால் மூக்கடைப்பும், மூச்சுத்திணறலும் ஏற்படுகின்றது.

இவ்வாறே சைனஸைட்டிஸ் தொல்லையினாலும் மூக்கடைப்பு ஏற்படுவதுண்டு. புரையழற்சியினால் தொடர்ந்து துன்பப்படுவோர் மூக்கடைப்பிற்கு உள்ளாவர். இதனால், நாசியின் இருபுறமும் வலியையும் வேதனையையும் உண்டுபண்ணுகின்றது. மூச்சுவிட முடியாத அளவு மூக்க டைப்பு ஏற்படும்போது, அதனைக் கவனிக்காது விடும் போது நாசியிலுள்ள சீதச்சவ்வு கடினமுற்று அப்பகுதிக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைந்து விடுகின்றது. இதுதவிர ஒவ்வாமையினாலும், நாசிப்புரையழற்சி யினாலும் மூக்கடைப்பு ஏற்படக்கூடும்.

## மூட்டுவலி

மூட்டுவலி என்பது ஒரு நோயல்ல. மூட்டுவலி என்றாலே மூட்டுவாதம் என்று மூடநம்பிக்கையில் நாட்டு வைத்தியம் செய்யும் முறை சமுதாயத்திற் பரவலாகவுள் ளது. மூட்டுவலி சிறுவர் முதல் பெரியவர்வரை ஏற்படலாம்.

ஆயினும், நாற்பது வயதிற்கு மேலுள்ளவருக்கு ஏற்படும் மூட்டுவலியையும், அதற்கான காரணத்தையும் பார்க்கலாம்.

**மூட்டுவலியின் காரணம்**

35-45 வயதிற்கு மேலுள்ளவர்களுக்கு மூட்டுவலி வருவதற்குக் காரணம், மூட்டுத்தேய்வு ஏற்படுவதே ஆகும். இது பெரும்பாலும் பெண்களுக்கே ஏற்படுகின்றது.

**மூட்டுத்தேய்வு என்றால் என்ன?**

மூட்டு எனப்படுவது தொடை எலும்புக்கும், கால் எலும்புக்கும் இடையேயுள்ள இணைப்புமூட்டு ஆகும். மூட்டிலுள்ள எலும்பு முனைகள் ஆர்டிகுலர் கார்டிலேஜ் என்னும் சவ்வினால் மூடப்பட்டு, இரண்டு எலும்புகளுக் கிடையே Gliduing தன்மையை ஏற்படுத்துகின்றது. இயற் கையிலேயே இந்த மூட்டில் மூட்டு நீர் 2-3 மில்லிமீற்றர் அளவு இருக்கும். இந்நீர் ஆர்டிகுலர் கார்ட்லேஜ் செல்களில் இருந்து சுரக்கப்படுகிறது.

மூட்டுத்தேய்வு நோயில் ஆர்டிகுலர் கார்டிலேஜ் எலும்பு மூட்டுச்சவ்வு தேய்ந்துவிடுவதனால் மூட்டில் இரு எலும்பு களுக்கு இடையேயும் உள்ள இடைவெளி குறைகின்றது. இரண்டு எலும்புகளின் முனைகளும் சவ்வால் மூடப்படாமல் ஒன்றோடொன்று உராயும்நிலை ஏற்படுவதனால் தேய்வு ஏற்படுகின்றது. இந்த எலும்புகளில் தேய்வு ஏற்படும்போது புதிய குருத்தெலும்புகள் எலும்புமுனையின் ஓரங்களில் உருவாகின்றன.

## பால் கலக்காத தேநீர்

உடல் பருமனையும், எடையையும் மிக வேகமாகக் குறைக்க கிரீன் டீ சாப்பிடுவது நல்லது. இப்போது பால் கலக்காத தேநீரும் உடல் எடையை அதிகரிக்காமல் அதிக எடையையும் உடனே குறைத்துவிடும் என்று ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஏனென்றால், தேயிலையில் உடல்எடையைக் குறைக் கக்கூடிய பல மூலப்பொருள்கள் உள்ளன. தேநீரிற் கலக்கப்படும் பசும்பாலிற் கொழுப்புச் சத்து அதிகம் உள்ளது. அது உடல் எடையை அதிகரித்துவிடும். எனவேதான் பால் கலக்காத தேநீரை அருந்தச் சொல்கின்றனர்.

இருப்பினும், இரண்டுவேளை பால் சேர்க்காத தேநீரை சீனி சேர்த்தே அருந்தி வருவது உடல் எடையைக் கட்டுப்படுத்த உதவுவதுடன், இரத்த அழுத்தத்தையும் குறைக்கிறது.

இதற்கு முன்பு பால் சேர்க்காத கோப்பியை அருந்தி வந்தால் இதயம் சிறப்பாக இயங்கும் என்று கண்டுபிடித்தனர்.

**தினமும் ஐந்துமுறை**
**எதைச் செய்தால் உடல்நலம் தொடரும்?**

தினமும் ஒரு வேளையாவது தியானம் செய்யவேண்டும். இதற்கே நேரம் இல்லை. டென்ஷன் என்று பதற்றப்படுகிற வர்கள் நேரம் கிடைக்கும் போதெல்லாம் மூன்று நிமிடங்கள் வீதம் ஐந்துமுறை மூச்சுப் பயிற்சி செய்யவும். இது தியானம் தரும் அமைதியையும், உடல் நலத்தையும் தரும். இரவிற் படுத்ததும் உடனே தூங்கி விடலாம். உங்கள் அலுவலக இருக்கையில் அமர்ந்தபடியே வலதுபக்க மூக்கினால் மூச்சை இழுத்து இடது பக்க மூக்கினால் வெளியே விடவும். பின்னர் இடது பக்க மூக்கினால் மூச்சை நன்கு இழுத்து வலது பக்க மூக்கினால் விடவும். இது ஒரு சுற்று ஆகும். குறைந்தது பத்து சுற்றாவது செய்யவும்.

மூன்று நிமிடங்களுக்குள் எத்தனை சுற்று உங்களால் செய்யமுடிகிறது என்று கணக்கிட்டு வைத்துக் கொள்ளுங்கள். ஆலயங்களில் உட்கார்ந்து அமைதி யாகச் செய்யலாம். மனம் வெறுமையாகவும் கவலை யாகவும் இருந்தால் உடனே ஐந்து சுற்றுகளோ அல்லது மூன்று நிமிடங்களோ இந்த மூச்சுப்பயிற்சியைச் செய்து வரவும்.

இரவு உணவிற்கு முன்பும் இரவு உணவு சாப்பிட்டு பத்து நிமிடங்கள் கழித்தும் இந்த மூச்சுப் பயிற்சியைச் செய்து வரலாம். தியானம், நடைப்பயிற்சி, உடற்பயிற்சி முதலி யவை தரும் அனைத்து நன்மைகளையும் இந்த மூச்சுப் பயிற்சி தருகிறது. பயன்படுத்தப் பயன்படுத்த உடல் நலமும் பூப்போலப் பூப்போல மனநலமும் மேம்படும்.

ஏ. சியானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# E.U.T



**HEAD OFFICE:-E.U.T.**
**CHUNNAKAM EAST, CHUNNAKAM,**
**JAFFNA, SRILANKA.**
**T.P:- 021-224 0110, 021-720 0857.**
**WEB:- WWW.EUT.LK**
**E-MAIL: email@eut.lk**

**BRANCH:-E.U.T.**
**NO: 270, K.K.S.ROAD,**
**JAFFNA, SRILANKA.**
**T.P:- 021-720 0850.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Midea
## Electro Mart

Authorized Dealer for **Abans** Ltd.




# Midea
## PC Show Room





**www.mideamart.com**
**e-mail: midea21@gmail.com**

**NO.1-I, 1-H, 1J,STANLEY ROAD,**
**JAFFNA, SRI LANKA.**
**Tel : 021-222 4566 Fax: 021-222 1646**

**NO.4, NEW MARKET,**
**CHAVAKACHCHERI, SRI LANKA.**
**Tel : 021-227 0268 Fax: 021-227 0129**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

northern
PC PARK




#269E, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel: 021 222 0388 / 077 757 0124
info@pcpark.co
www.pcpark.co



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Proverbs – பழமொழி / மூதுரை

Proverbs are popular sayings expressed in a clever brief manner

பழமொழிகள் என்பன சுருக்கமான, புத்திசாலித்தனமான மூதுரைகளாகக் காணப்படுகின்றன. சில புகழ் பெற்ற ஆங்கிலப் பழமொழிகளும், அவற்றிற்குச் சமமான தமிழ்ப் பிரயோகமும் கீழே தரப்படுகின்றன.

01) Cut your coat according to your cloth
வரவிற்கேற்பச் செலவு செய்.

02) Look before you leap.
ஆழமறியாமற் காலை விடாதே.

03) No smoke with out fire
நெருப்பில்லாமற் புகை வராது.

04) All that glitters is not gold
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

05) When the cat is away the mice will play
பூனையில்லாத வீட்டிற் சுண்டெலிக்குக் கொண்டாட்டம்.

06) Out of the frying pan into the fire
வாணலிக்குப் பயந்து அடுப்பில் விழுந்தது போல.

07) A friend in need is a friend indeed
உண்மை நண்பனை ஆபத்திலறி.

08) Barking dogs seldom bite
குரைக்கின்ற நாய் கடிக்காது.

09) Empty vessels make most sound
நிறைகுடம் தளம்பாது.

10) Like the frog in the well
கிணற்றுத் தவளை போல.



# Idioms – மரபுச் சொற்றொடர்

மரபுச்சொற்றொடர்கள் மிகவும் சுவையான அர்த்தங்களைத் தமக்குள்ளே கொண்டிருப்பவை. இவை வெளிப்படையான ஒரு அர்த்தத்தையும், உட்கிடையாக ஆழ்ந்த அர்த்தத்தையும் கொண்டிருக்கும். சில சுவையான ஆங்கில மரபுச் சொற்களும், அவற்றின் தமிழ் விளக்கங்களும் கீழே தரப்படுகின்றன.

01) Raining cats and dogs - அடை மழை.
2) Wash hands - கை கழுவுதல், விடயத்தைப் பூரணமாகக் கைவிடுதல்.
03) Hair - breadth escape - மயிரிழையில் தப்புதல்.
04) Book worm - புத்தகப்புழு, உலக ஞானம் அற்றவர்.
05) To stab on the back - முதுகிற் குத்துதல், துரோகமிழைத்தல்.
06) Back bone less person - முதுகெலும்பு இல்லாதவர், சுய நம்பிக்கையற்றவர்.
07) At the eleventh hour - கடைசி நேரத்தில்.
08) Crocodile tears - முதலைக் கண்ணீர் , போலி அனுதாபம்.
09) From the bottom of the heart - இதயத்தின் அடியிலிருந்து, உண்மையான தன்மையுடன்.
10) With a double tongue - இரட்டை நாக்கு, உறுதியற்ற தன்மை.

எம். மயூரன்
உடுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KAJAMUGAN

# *Hardware*

## கஜமுகன் ஹாட்வெயர்

*Hardware Merchants,*
*Importers of Building Materials,*
*Cement, CIC Paints,*
*Lanwa Ceylon Steel,*
*Macson Mesh,*
*National PVC, PEPSI Soda*
*& Accessories.*













147,149, Stanley Road, Jaffna.
Tel : 021 222 2833, 021 222 9733
Fax : 021 222 2368
e-mail:kajamuganhw@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இலக்கம் | | NUMBERS | |
|---|---|---|---|
| 1 | එක<br>ஒன்று<br>One | எக<br>ඔන්රු<br>වන් | Eka<br>Onru<br>வன் |
| 2 | දෙක<br>இரண்டு<br>Two | தெக<br>ඉරන්ඩු<br>ටූ | Deka<br>Erandu<br>டூ |
| 3 | තුන<br>மூன்று<br>Three | துன<br>මූන්රු<br>ත්‍රී | Thuna<br>Moonru<br>திரி |
| 4 | හතර<br>நான்கு<br>Four | ஹதர<br>නාන්කු<br>ෆෝ | Hathara<br>Nanku<br>போர் |
| 5 | පහ<br>ஐந்து<br>Five | பஹ<br>අයින්දු<br>ෆයිව් | Paha<br>Ainthu<br>பயிவ் |
| 6 | හය<br>ஆறு<br>Six | ஹய<br>ආරු<br>සික්ස් | Haya<br>Aaru<br>ஸிக்ஸ் |
| 7 | හත<br>ஏழு<br>Seven | ஹத<br>ඒ ළු<br>සෙවන් | Hatha<br>Ealu<br>செவன் |
| 8 | අට<br>எட்டு<br>Eight | அட்ட<br>එට්ටු<br>එයිට් | Ata<br>Ettu<br>எயிட் |
| 9 | නවය<br>ஒன்பது<br>Nine | நவய<br>ඔන්පදු<br>නයින් | Nawaya<br>Onbathu<br>நயின் |
| 10 | දහය<br>பத்து<br>Ten | தஹய<br>පත්තු<br>ටෙන් | Dhahaya<br>Paththu<br>டென் |
| 20 | විස්ස<br>இருபது<br>Twenty | விஸ்ஸ<br>ඉරුපදු<br>ටුවෙන්ටි | Wissa<br>Irupathu<br>டுவென்டி |
| 30 | තිහ<br>முப்பது<br>Thirty | திஹ<br>මුප්පදු<br>තර්ටි | Thiha<br>Muppathu<br>தேற்றி |
| 40 | හතලිහ<br>நாற்பது<br>Forty | ஹத்தலிஹ<br>නාට්පදු<br>ෆෝටි | Hathliha<br>Natpathu<br>போர்ட்டி |
| 50 | පනහ<br>ஐம்பது<br>Fifty | பனஹ<br>අයින්පදු<br>ෆිෆ්ටි | Panaha<br>Aimpathu<br>பிப்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கம் NUMBERS

| | | | |
|---|---|---|---|
| **60** | **හැට**<br>**அறுபது**<br>Sixty | **ஹெற்ற**<br>අරුපදු<br>සික්ස්ටි | Heta<br>Arupathu<br>**ஸிக்ஸ்டி** |
| **70** | **හැත්තෑව**<br>**எழுபது**<br>Seventy | **ஹெத்தேவ**<br>එළුපදු<br>සෙවන්ටි | Hetthewa<br>Elupathu<br>**செவன்டி** |
| **80** | **අසූව**<br>**எண்பது**<br>Eighty | **அஸுவ**<br>එන්පදු<br>එයිටි | Asuwa<br>Enpathu<br>**எயிற்றி** |
| **90** | **අනූව**<br>**தொண்ணூறு**<br>Ninety | **அனூவ**<br>තොන්නූරු<br>නයින්ටි | Anuwa<br>Thonnuru<br>**நயின்றி** |
| **100** | **සිය**<br>**நூறு**<br>Hundred | **ஸீய**<br>නූරු<br>හන්ඩ්‍රඩ් | Seeya<br>Nooru<br>**ஹன்றட்** |
| **200** | **දෙසිය**<br>**இருநூறு**<br>Two Hundred | **தெஸீய**<br>ඉරුනූරු<br>ටූ හන්ඩ්‍රඩ් | Deseeya<br>Irunooru<br>**டூஹன்றட்** |
| **300** | **තුන්සිය**<br>**முந்நூறு**<br>Three Hundred | **துன்ஸிய**<br>මුන්නූරු<br>ත්‍රී හන්ඩ්‍රඩ් | Thunseeya<br>Munooru<br>**திரிஹன்றட்** |
| **400** | **හාරසිය**<br>**நாநூறு**<br>Four Hundred | **ஹாரஸீய**<br>නානූරු<br>ෆෝ හන්ඩ්‍රඩ් | Hayaseeya<br>Nanooru<br>**போஹன்றட்** |
| **500** | **පන්සිය**<br>**ஐநூறு**<br>Five Hundred | **பன்ஸீய**<br>අයිනූරු<br>ෆයි හන්ඩ්‍රඩ් | Panseeya<br>Aynooru<br>**பயிஹன்றட்** |
| **600** | **හයසිය**<br>**அறுநூறு**<br>Six Hundred | **ஹயஸீய**<br>අරුනූරු<br>සික්ස් හන්ඩ්‍රඩ් | Hayaseeya<br>Arunooru<br>**ஸிக்ஸ்ஹன்றட்** |
| **700** | **හත්සිය**<br>**எழுநூறு**<br>Seven Hundred | **ஹத்ஸீய**<br>එළුනූරු<br>සෙවන් හන්ඩ්‍රඩ | Hathseeya<br>Elunooru<br>**செவன்ஹன்றட்** |
| **800** | **අටසිය**<br>**எண்ணூறு**<br>Eight Hundred | **அடஸீய**<br>එන්නූරු<br>එයිට් හන්ඩ්‍රඩ් | Ataseeya<br>Ennooru<br>**எயிற்ஹன்றட்** |
| **900** | **නවසිය**<br>**தொளாயிரம்**<br>Nine Hundred | **நவஸீய**<br>තොළායිරම්<br>නයින් හන්ඩ්‍රඩ් | Nawaseeya<br>Tholayeram<br>**நயின்ஹன்றட்** |
| **1000** | **දහ**<br>**ஆயிரம்**<br>Thousand | **தாஹ**<br>ආයිරම්<br>තවුසන්ඩ් | Dhaha<br>Ayeram<br>**தவுசன்ட்** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழைப்பால் உயர்ந்தவர்

"குடும்பச் சுமையைத் தாங்கப் பதைபதைக்கும் வெயிலில் வீதி வேலையை நான் மேற்பார்வை செய்து கொண்டிருந்தபோது; எங்கிருந்தோ வந்து என் வாழ்வைத் திசைதிருப்பிவிட்ட அந்தப் பெருந் தகையின் சந்திப்பு, எனது வாழ்வை வளப்படுத் தியமை என் வாழ்வின் திருப்புமுனை" இவ்வாறு கூறுகிறார் இணுவில் அண்ணா தொழிலக அதிபர் பொன். நடராஜா.

"ஓர் ஏழ்மையான விவசாயக் குடும்பத்திற் பிறந் தேன். 6 பெண் சகோதரிகள், எனது பாடசாலைக் கல்விக்கும் மேலாக எனது வாசிப்புப் பழக்கமே என் வாழ்க்கையை வளப்படுத்தியது என்பேன். நாட்டிற் கும் வீட்டிற்கும் பயனுடையவனாக நான் வாழ வேண் டுமென்ற துடிப்பையும், அவ்வாழ்வைக் கடின உழைப் பினால் எட்டமுடியும் என்ற இலட்சியத்தையும் நல்ல நூல்கள் என் உள்ளத்தில் ஆழப்பதியவைத்தன.

விவசாயமே என் குடும்ப வருமானமென்பதால் குடும்பக் கஷ்டத்தை உணர்ந்து வேலை தேடி 1957 இல் கொழும்பிற்குச் சென்றேன்.

கொழும்புத் துறைமுகத்தில் கிளாக் வேலை, லீலா அச்சகத்தில் அச்சுத் தொழிலாளி, சரஸ்வதி ஸ்ரோர் சில் சிப்பந்தி வேலை என மாறி மாறித் தொழில் பார்த்தும், வருமானம் போதாமையால் ஈராண்டு களில் யாழ்ப்பாணம் திரும்பினேன்.

வீதிக்குத் தார்போடும் ஓர் ஓவஸ்சியரின் கீழ் உதவி யாளராக வேலை கிடைத்தது. மல்லாகம், ஏழாலை வீதியில் பதைக்கும் வெயிலில் தார் ஊற்றுவதை மேற் பார்வை செய்தபோது முன்பின் தெரியாத ஒருவர் குரு வாக வந்து என்னைத் தலையளித்து ஆட்கொண்டார்.

ஆம். அந்த மில்க்வைற் வாகனம் என்னருகில் வந்து நின்றது. அதன் முதல்வர் க. கனகராஜா இறங்கிவந்து என்னிடம் கதை கொடுத்தார். ஊரைக் கேட்டார். உறவுகளைக் கேட்டார். என் கடின உழைப் பைக் கண்காணித்தார். அந்த வீதியில் இவ்வாறான சிலநாட் சந்திப்பு எனக்கு அவர்மீது ஓர் இனந் தெரியா மதிப்பை ஏற்படுத்தியது. எனது தொழில், குடும்பக் கஷ்டங்களை அக்கறையுடன் அறிந்து கொண்ட அவர்; ஒரு நாள் புன்னகை புரிந்து "நாளைக்கு என் வீட்டிற்கு வா என்றார். இந்த அழைப்பே என் வாழ்க்கையின் ஒரு திருப்புமுனை யாக அமைந்தது. "

குருந்தமர நிழலில் மாணிக்கவாசகரை சிவன் தடுத்தாட்கொண்டமைபோல, திரு. க. கனகராஜா என் னைத் தடுத்தாட் கொண்டார் என்றே கூறுவேன்.

மில்க்வைற் தொழிலகத்திற் கடினமாக உழைக்கப் பழகிப் பின், கனகராஜாவின் ஆலோசனைக் கிணங்க என் வீட்டையே குடிசைக் கைத்தொழிற் சாலையாக மாற்றி, என் சகோதரரிகளும் நானும் கோப்பியை உரலில் இடித்துப் பொதிசெய்து, துவிச்சக் கரவண்டியில் நானே அயலிலுள்ள கடைகளுக்கு எடுத்துச்சென்று விநியோகிக்கும் ஒரு சுயதொழிலை ஆரம்பித்தேன்.

எனது இக்குடிசைத் தொழில் கணிசமான அளவு வளர்ச்சி கண்டபோது, மில்க்வைற் அதிபர் தனது விற்பனை வாகனத்திலேயே எனது கோப்பிப் பொதி- களையும் எடுத்துச்சென்று விற்பனை செய்யக் கைகொடுத்தார். நாளொரு பொழுதாக நான் கண்ட வளர்ச்சியை அவர் கண்டு மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாகக் கோப்பியோடு, ஏனைய பொருள்களான ஜீவாகாரம், ஆட்டாமா, குரக்கன்மா, அரிசிமா, மிளகாய்த்தூள், அண்ணா பற்பொடி, ஊதுபத்தி, சொட்டு நீலம் முதலான பொருள்களையும் பொதி செய்து விற்பனைசெய்ய ஆரம்பித்தேன். இயந்திரங்களைவிட மனித வளத்தைப் பயன்படுத்துவது ஏழைகள் பலருக்கு வாழ்வளிக்கும் என்பது எனது இலட்சியக் கோட்பாடாகும்.

நாடளாவியரீதியில் எனது உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல சந்தை கிடைத்தது. அதனால் தொழில் விஸ்தரிப்புகளை மேற்கொண்டேன். சிற்றளவுக் கைத்தொழிலாக வைத்திருக்கும் எனது கொள்கை காரணமாகக் கந்தானை, வவுனியா போன்ற இடங்களிலும் தொழிற்சாலைகளை ஆரம்பித்தேன்.

இவ்வாறான கைத்தொழிலோடு விவசாயப் பண்ணைகளை ஆரம்பிக்க விரும்பினேன். 1975இல் உரும்பிராய், மருதனார்மடம் வீதியிலும் 1983இல் பலாலி விமான நிலையம் சார்ந்த குரும்பசிட்டியிலும் விவசாயப் பண்ணைகளை ஆரம்பித்து; பயிர்ச்செய்கை, ஆடு, மாடு, கோழி, பன்றி முதலான கால்நடை வளர்ப்புக்களையும் அங்கு மேற்கொண்டேன்.

போரினது உக்கிரத்தால் ஏற்பட்ட அழிவுகள், இழப்புக்கள் மிக அதிகம். பலஇழப்புக்களுக்கு முகம் கொடுத்து எனது தொழில் முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றேன். என் தொழில் முயற்சி 2004ஆம் ஆண்டு சிற்றளவுக் கைத்தொழிலுக்கான ஜனாதிபதி விருதைப் பெற்றுத்தந்தது.

அத்துடன் "கிராமியக் கைத்தொழில், மற்றும் ஊக்குவிப்பு அமைச்சின் அனுசரணையுடன் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை தேசிய மட்டத்தில் நடத்திய போட்டியிற் சிறிய நடுத்தரக் கைத்தொழில், உணவு மற்றும் பானங்கள் என்னும் துறையில் யாழ். மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று, சிறந்த தொழில் முயற்சியாளர் என்ற விருதை நான்கு முறை பெற்றமையையிட்டு மகிழ்வடைகிறேன்" என்றார்.

# சடங்குகளும் சம்பிரதாயங்களும் காரணமாகத்தான்

அன்றாடம் நாம் செய்யும் பல சடங்குகளை அவற்றின் அர்த்தம் புரிந்து செய்தாலே உரியபலன் பெறமுடியும். வாழ்க்கையை நிறைவாக, மகிழ்ச்சியுடன் வாழமுடியும்'

இன்று மனதையும் உடலையும் அமைதி செய்வதில் முக்கியமான பங்கு வகிக்கிறது 'அரோமா ஒயில்கள். அவற்றிற் சில குறிப்பிட்ட வாசனைகள், சில குறிப்பிட்ட விடயங்களுக்குத் தீர்வாக அமைகின்றன.

அரோமா தெரபி தரப்படும் இடங்களில் இந்த ஒயில் கலந்த அகல்விளக்குகள் அல்லது மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம். அந்த விளக்குகள் எரிய எரிய அவற்றின் அந்த வாசனை வெளியாகி குறிப்பிட்ட பலனைத் தருகின்றன. வீடுகளில் ஏற்றப்படும் எண்ணெய் விளக்குகள் கூட இந்தவிதமான மருத்துவ பலாபலன்களை மனதிற் கொண்டு ஏற்றப்படுவதுதான்.

உதாரணத்திற்கு சுகங்களைக்கூட்ட பஞ்சுத் திரி, விளக்கு; கிரகதோஷம் நீங்கி சுகம் கிடைக்க பசுநெய் விளக்கு; பாவங்களை அகற்றி செல்வங்களைத் தக்கவைக்க தாமரைத் தண்டுத் திரி விளக்கு என்று விதம்விதமாகப் பலன்கள் சொல்லப்படுகின்றன. இவற்றிற்பல இடைச்செருகலாக சேர்க்கப்பட்டவை என்பதையும் மனதில் கொள்ளுங்கள்.

எனவே, கண்ணை மூடிக்கொண்டு இவற்றை நம்புவதை விட, மருத்துவ அறிவை மனதில் வைத்து இவற்றைப் பார்த்தாலேதான் இவை எத்தனை பலனுள்ளவை என்று புரியும்.

எந்தத் தாவர எண்ணெய் விளக்குமே நம் சுற்றுப்புறத்தில் இருக்கும் சாத்வீக அலைகளை ஏந்தி வந்து, நம்மிடம் சேர்ப்பிக்கும். இதனால் நம் மனதின் பளு, எரிச்சல், கோபம் நீங்கி மகிழ்ச்சி ஏற்படுகிறது. உதாரணமாக இதில் எண்ணெய் விளக்கு ஒரு மீற்றர் விட்டத்தில் சாத்வீக அலைகளை ஏற்படுத்தித் தருகிறது என்றால் நெய் விளக்கு அதுபோல் நூறு மடங்கு ஏற்படுத்துகிறது.

அதனாலேதான் பலர் கூடும் கோயில்களில் முக்கிய விசேடங்களில் நெய் விளக்கு ஏற்றுகிறோம். இதேபோல் நல்லெண்ணெய்க்கு நம் சருமத்தின் கிருமிகளை நீக்கி சரும நோயைத் தடுக்கும் ஆற்றல் உள்ளது.

தாமரைத் தண்டுத் திரி 'ஆன்டி ஆக்ஸிடெண்ட்' விடயங்களை நம் உடல்பெற ஒத்துழைக்கிறது. இதனால் முதுமை சீக்கிரம் அண்டாது. எப்போதும் சோம்பல் இல்லாமல் உழைப்பீர்கள். வெள்ளிக்கு கிருமிகளைக் கொல்லும் சக்தி உண்டு. வெள்ளி விளக்கு எரிய எரிய கிருமிகள் அழிந்து அந்த அறை தூய்மையாக்கப்படுகிறது. இப்படி விளக்கிற் சேரும் ஒவ்வொரு விடயத்திற்கும் ஒவ்வொரு பலன்.

அன்று சுற்றுப்புற இருள் நீக்க நிறைய விளக்குகள் தேவைப்பட்டது. அதை வடிவமைக்கும்போது நம் சுவாசம், நம் சருமம், இதயம், சுற்றுப்புறத் தூய்மை எனச் சுகாதாரத்தையும் மனதில் வைத்து விதவிதமாக விளக்குகளை வடிவமைத்தார்கள். யாகங்களும்கூட இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டவைதான். குழந்தை பிறப்பிற்காக யாகம்; மழை வர யாகம்; நாடு செழிக்க யாகம் என்று அதை உருவாக்கும் விடயங்களை அதன் சூட்சுமத்தோடு அக்னியிற் சேர்த்துப் புகை உருவாக்குகிறார்கள்.

சம்பிரதாய விடயங்களை, விஞ்ஞான பூர்வமாக அணுகுங்கள். அதன்மூலம்தான் உண்மையான பலன்களைப் பெறமுடியும். இன்று இன்டர்நெட் காலம். விரல் நுனியிற் கூடப் பலன்களைப் பெறமுடியும். அனுபவியுங்கள் மகிழ்ச்சியோடு இருங்கள்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடி அமீன்

உலகத்தின் மிகப்பெரிய நீளமான நதியான (579 கி.மீ.) நைல் நதி, உற்பத்தியாகும் நாடு உகாண்டா! கடல் மட்டத்திற்கு 5,000 அடி உயரத்தில் உள்ள செழிப்பான பூமி. தகிக்கும் வெயிலும் உஷ்ணமும் மிகுந்த ஆப்பிரிக்கக் கண்டத்தின் தட்பவெப்ப நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட குளிர்ச்சி பொருந்திய நாடு உகாண்டா! பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களின் ஆளுகைக் குட்பட்ட நாடு அது.

உணவுப் பொருள் விளைச்சலிலும் ஆப்பிரிக்க நாடுகளிலேயே முன்னணியில் நின்றது உகாண்டா தான். வெளிநாட்டினர் பலர் அந்நாட்டிற் பெரும் பணத்தை முதலீடு செய்து ஏராளமான தொழிற் சாலைகளைத் ஆரம்பித்து, அதை மேலும் வளப் படுத்தி இருந்தனர்.

பொது மருத்துவமனைகளும், இரயில் போக்கு வரத்தும், விமானப் போக்குவரத்தும், இதர போக்கு வரத்து வசதிகளும் சீராகச் செயல்பட்டு வந்த நாடு அது.

அந்த நாட்டின் விடுதலைக்காக, 'உகாண்டா பீப்பிள்ஸ் காங்கிரஸ்' என்ற ஒரு விடுதலை இயக்கம் போராடி வந்தது. 1962ஆம் ஆண்டில் உகாண்டா நாட்டுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட்டு,கிவானுகா என்பவர் பிரதமரானார்.

1962 ஒக்டோபரில் உகாண்டா பூரண சுதந்தரம் பெற்றது.

அதற்குப் பின்னர் நடந்த இரண்டாவது இடைத் தேர்தலில் மில்டன் ஒபாட்டே என்பவர் பிரதமர் ஆனார். கபாகா என்பவர் ஜனாதிபதியானார்.

கபாகாவுக்கும், ஒபாட்டேவுக்கும் ஏற்பட்ட அதிகாரப் போட்டியில் ஒபாட்டே வென்றார். கபாகா தப்பி ஓடி லண்டனில் தஞ்சம் புகுந்தார்.

அந்த கபாகாவை ஒழித்துக்கட்ட ஒபாட்டே முறை கேடாகப் பயன்படுத்திக்கொண்ட இராணுவ கமாண் டர்தான் இடி அமீன்!

**யார் அந்த இடி அமீன்?**

1925ஆம் ஆண்டில் மேற்கு நைல்நதி மாநிலத்தில், கொபாசோ என்ற பகுதியில் தெற்கு சூடானியர் இனத்தின் காக்வா பழங்குடிப் பிரிவைச் சேர்ந்த ஓர் ஏழை விவசாயக் கூலியின் மகனாகப் பிறந்தவன்தான் இடி அமீன். இளம் வயதிலேயே அவனது தந்தை அவனது தாயை விட்டுப் பிரிந்து விட்டார். அவனது தாய் இராணுவ முகாமில் போய் இராணுவ வீரர்களோடு வாழ்ந்து வந்தாள்.

இடி அமீன் 1946ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இராணு வத்தில் ஆப்பிரிக்க ரைபிள்ஸ் படைப் பிரிவில் ஒரு சமையல் அறை உதவியாளனாகச் சேர்ந்தான். 1947இல் சிப்பாயாகி 1949இல் கோர்ப்போரல் ஆகப் பதவி உயர்வு பெற்றான். அத்துடன் குத்துச்சண்டைப் பயிற்சிபெற்று ஒன்பது ஆண்டுகளாக உகாண்டா வின் தேசிய குத்துச்சண்டை சம்பியனாகவும் விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962இல் ஒபாட்டே பிரதமரானதும் கரமோஜா மாகாணத்தில் வட பகுதியில் பாகாண்டா பழங்குடி வகுப்பைச் சேர்ந்த கரமோஜாங், தர்கானா ஆகிய இரு பிரிவு மக்களிடையே ஏற்பட்ட கலகத்தை அடக்கச் சென்ற அரசாங்கப் படைக்கு இடி அமீன் ஷாபான், அபாலாட் ஆகிய இருவரும் கொமாண்டர்களாகச் சென்றனர்.

கலகம் அடக்கப்பட்டது. ஆனால், இடி அமீனின் படைகள் கலகத்தை அடக்கியதோடு நிற்காமல் கற்பழித்தல், இனப்படுகொலை, கொள்ளை முதலிய செயல்களிலும் ஈடுபட்டன. அதுகுறித்து அப்பகுதி மக்கள் அனுப்பிய புகாரை விசாரித்து நடவடிக்கை எடுக்க ஆங்கிலேய அரசாங்கம் ஏற்பாடு செய்தது. ஆனால், தற்காலிக அரசின் பிரதமரான ஒபாட்டே அதில் தலையிட்டு விசாரணையைக் கைவிடச்செய்து இடி அமீனைக் காப்பாற்றினார்.

அதன்பின்னர் ஒபாட்டேயும், இடி அமீனும் சேர்ந்து திட்டமிட்டு ஜனாதிபதி கபாகாவின் அரண் மனைக்குள் திடீரென்று புகுந்து தாக்கி அவரை நாட்டைவிட்டே ஓடிப்போகச் செய்தனர். அந்தத் தாக்கு தலுக்குத் தலைமை வகித்தவன் இடி அமீன்தான்!

ஆனால், இடி அமீனை, ஒபாட்டே அளவுக்கு அதிகமாக நம்பி வருவது ஆபத்து என்று அவனது ஆதரவாளர்கள் பலரும் அறிவுரை கூறினர். அதை ஒபாட்டே கேட்கவில்லை. இடி அமீனை துணைக் கொமாண்டராக்க உத்தரவிட்டான் ஒபாட்டே.

பின்னர் காங்கோவின் எல்லைப் பகுதிகளில் உள்ள ஒபாட்டேயின் சொந்த மலைச் சாதியினரை அந்நாட்டின் அரசுக்கு எதிராகப் புரட்சி செய்யத் தூண்டிவிட்டு, பணமும் ஆயுதங்களும் கொடுத்து உதவிவந்தார் ஒபாட்டே. காங்கோ ஜனாதிபதி மோபுட்டு அந்தக் கலகக்காரர்களை உகாண்டா எல்லையைத் தாண்ட விடாமல் தடுத்து அடக்கி ஒடுக்கி வந்தார்.

உகாண்டாவில் தன் ஆட்சி ஏற்பட்டால் அதற்குத் தன் இன மக்களின் ஆதரவு வேண்டும் என்று கருதி ஒபாட்டே அவர்களுக்கு உதவுவதற்காக இடி அமீனைப் பயன்படுத்தினார். காங்கோ எல்லைப் பகுதி கலகக்காரர்களுக்கு ஆயுதங்களைச் சேகரிக்கும் பணியை இடி அமீனிடம் ஒப்படைத்தார் ஒபாட்டே. அதன்மூலம் இடி அமீன் தன் அதிகாரத்தையும் செல்வாக்கையும், பொருளாதாரத்தையும் வளர்த்துக் கொண்டான்.

எண்டபி என்ற இடத்தில்உள்ள இடி அமீன் வீட்டுக்கும், தலைநகரான கம்பாலாவில் உள்ள பிரதமர் ஒபாட்டேயின் அலுவலகத்துக்கும் தனி ஒலிஅலைத் தொடர்பும் இருந்தது. அவ்வப்பொழுது ஒபாட்டேயே இடி அமீன் வீட்டுக்கு இரகசியமாகச் சென்று அவனிடம் பேசிவிட்டு வருவதும் உண்டு.

ஜனாதிபதி கபாகாவை விரட்டியடித்த பின்னர், ஜனாதிபதி பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட ஒபாட்டே; இடி அமீனை மேலும் மேலும் அதிகமாக நம்பினார்.

அதைப் பயன்படுத்திக் கொண்டு இடி அமீன் பத்து லட்சம் டாலர்கள்வரை சேர்த்துவிட்டான்.

அவனது வரம்பு மீறிய அதிகார வெறியைப் பற்றியும் அளவுக்கு மீறிய சம்பாத்தியத்தைப் பற்றியும் ஒபாட்டேயின் உதவியாளன் ஹென்றி கியாம்பேயும், சில அமைச்சர்களும் அவ்வப்பொழுது ஒபாட்டேயிடம் சொல்லி எச்சரித்தே வந்தனர்.

அதனால் சிறிது யோசிக்க ஆரம்பித்த ஒபாட்டே; இடி அமீனைச் சற்றே கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அதைத் துரிதப்படுத்தும் வகையில் ஒபாட்டேயின் உயிரைப் பறிக்க இரண்டுமுறை முயற்சி செய்யப் பட்டது. அந்த இரண்டு தடவைகளிலும் இடி அமீன் ஒபாட்டேயுடன் இருக்காமல் தன் வீட்டிலேயே இருந் தது ஒபாட்டேயின் சந்தேகத்தைக் கிளறியது.



(தொடரும்)
அடுத்த வெளியீட்டில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Peoples' Hardwares

## மக்கள் இரும்பகம்




இல. 27, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

No. 27, Stanley Road,
Jaffna.
T.P: 021 222 4535

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான

திருமண அழைப்பிதழ்கள்

மற்றும்

அனைத்துவிதமான அச்சுவேலைகளையும்

தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்

இவற்றுடன்

கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...

நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# பாரதி பதிப்பகம்

இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 3081




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவ மாயையிற் சிக்கி விழுங்கப்படும் சிறுகைத்தொழில்கள்

முதலாளித்துவ நிறுவனங்களின் ஆதிக்கம் ஒரு நாட்டின் சிறு வணிகங்களை அல்லது கைத்தொழிற் றுறையை அடியோடு அல்லது சிறிது சிறிதாக அழித்துவிடும் ஆற்றல் கொண்டது.

உலக மயமாக்கல் என்ற போர்வையிற் பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் சிறுவணிகங்களை அல்லது கைத்தொழில்களைச் சிறிது சிறிதாக விழுங்கி ஏப்பம் விட்டுவிடும்.

மேற்குலக முதலாளித்துவ நாடுகள் உலக மயமாக்கல் அல்லது தாராளமயமாக்கல் என்ற போர்வையில் மூன்றாம் உலக நாடுகளைத் தங்க ளது பெரும் சந்தையாகவே கருதுகின்றன.

வெளிப்படையாகப் பார்க்கப்போனால் மேற்குலக முதளாளித்துவ நாடுகள் 3ஆம் உலக நாடுகளைத் தங்களுடைய குப்பைத் தொட்டிகளாகவே கருதுகின் றன.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட முதலாளித் துவ மேற்குலக நாடுகள், சுயசார்புப் பொருளாதாரக் கொள்கையுடைய கம்பனிகளின் சித்திரத்தை, அடி யோடு வெறுப்பது தனது உலகளாவிய முதலாளித் துவ ஆதிக்கத்தைப் பாதிக்கும் என்பதனாலேதான்.

இந்தவகையிலேயே கடந்த 30 வருட யுத்தத்தி னால் விரும்பியோ விரும்பாமலோ தாராளமயமாக் கல் என்ற சித்தாந்தத்திற்குள் சிக்காத இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தற்போது அந்த மாயைக் குள் சிக்குண்டு சீரழிய ஆரம்பித்துவிட்டன.

இதன் காரணமாக வடக்கு கிழக்கு பகுதிகள் தமது சுயத்தை இழந்து தாராள மயமாக்கல் என்ற மாயைக் குள் சிக்கிக் கொண்டுள்ளன.

நீண்டகாலமாக நீடித்த போர் நிறைவிற்கு வந்ததும் அடுத்த கணமே முதலாளித்துவ பல்தேசியக் கம்பனிகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளை நோக்கி படையெடுக்க ஆரம்பித்தது விட்டதை இதன் மூலம் நேரடியாகவே அறிந்துகொள்ள முடியும்.

பல்தேசியக் கம்பனிகள் அல்லது பெரு முதலாளித் துவ நிறுவனங்களின் ஆதிக்கம் சிறு தொழில்களை அல்லது சிறு முதலீட்டாளர்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை வடக்கு, கிழக்குப் பகுதி மக்கள் தற்போது உணரத்தொடங்கிவிட்டார்கள் .

இலகு சுப்பர் மார்க்கெட்டுக்களின் வரவு, பெட்டிக் கடைக்காரர்களின் வயிற்றில் அடிக்கத் தொடங்கி விட்டதைப்போல இன்னும் பலவற்றினைக் குறிப்பிட லாம் .

குரக்கன் பிட்டும், ஒடியற் கூழும்போய் இன்று வடக்கு, கிழக்கு மக்களின் வயிற்றினை பீசாவும், பார்களும் பலியெடுக்கத் தயாராகிவிட்டன.

இன்னும் சிறிது காலத்திற் குரக்கன் பிட்டையும், ஒடியற் கூழையும், பனம் சீனியையும் இந்த மக்கள் அகராதிகளில் மட்டும் பார்க்க முடிந்தாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை.

இதுவே முதலாளித்துவ அல்லது தாராள மயமாக் கல் என்ற சித்தாந்த மாயையின் விளைவு ஆகும்.

பனைவளம் நிறைந்த வடக்கு, கிழக்குப் பகுதி களிற் பெரும்பாலான தேவைகளை நிறைவுசெய்ய இந்தப் பனைவளமே போதுமானதாக இருந்தது.

இந்தப் பனை சார்ந்த கைத்தொழில்களை நம் பியே இலட்சக் கணக்கான வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரம் தங்கி இருந்தது.

தென்னந்தும்புக் கயிற்றையும், தும்புத்தடி, விளக்கு மாற்றையும் முன்னரே கூறியவாறு இனி வரும் காலங்களில் அரும்பொருட்காட்சிச்சாலை களில் மட்டுமே காணமுடியும்.

கட்டுமரத்திற் போய்க் கரைவலை வீசி எவருமே மீன் பிடிக்க முடியாது. முதலாளித்துவ சித்தாந்தம் அல்லது ஆக்கிரமிப்பு கரைவலைத் தொழில்களை ஏளனமாகப் பார்த்து எக்காளமிட்டுச் சிரிக்க ஆரம் பித்துவிட்டது.

முதலாளித்துவம் டைனமற்றோடும், பாரிய மீன் பிடிக்கலங்களோடும் வந்து எமது வளத்தை அடி யோடு கொள்ளையடித்துச் செல்கின்றது.

கட்டுமரத்துடன் கரைவலையை நம்பித் தொழில் செய்த எமது மீனவர்கள், இன்று வாழவழியற்று, விழிநிறைந்த நீரோடும், பசி நிறைந்த வயிற்றோடும் பரிதவித்து நிற்கின்றார்கள். அவர்களது வளத்தை முதலாளித்துவம் விழுங்கி ஏப்பம்விட்டு, கை கொட்டிச் சிரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை எனக் கைத்தொழில்கள் நிறைந்து செறிந்த பகுதிகளில் இன்று எத்தனை கைத்தொழிற் பேட்டைகளை உங்களாற் சுட்டிக்காட்ட முடியும்.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை விரைவில் ஆரம்பமாகும் என்கின்றார்கள். கைதடி பனை அபிவிருத்திச்சபை மீண்டும் வருகிறது என்கிறார்கள். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம் மீண்டும் இயங்கும் என்றெல்லாம் பேசுகிறார்கள்.

இவற்றைக் கேட்பதற்கு இதமாக இருந்தாலும், முதலாளித்துவ சித்தாந்தத்திற்குள் அல்லது தாராள மயமாக்கல் என்ற கொள்கைகளுக்கு முன்னால் இவை எவ்வாறு நின்று நிலைக்கப் போகின்றன?

அப்படி நின்று நிலைத்தாலும் இவற்றையும் இனி மேற் கைத்தொழிற் பேட்டைகளாகக் கணக்கில் எடுக்க முடியுமா? என்பது கேள்விக் குறியே.

ஏனெனில் மனித வலுக்களைவிட இயந்திர வலுக்களே இங்கேயும் இனி ஆதிக்கம் செலுத்தப் போகின்றன. இயந்திரத்தை இயக்கவும் நிறுத்தவும் ஒரு சிலர் இருந்தாற் போதுமென்ற நிலை இங்கும் திணிக்கப்படலாம்.

இத்தகைய காரணிகளாலும், சூழ்நிலைகளாலும் வேலைவாய்ப்பு என்பது எட்டாக்கனியாகவே மாறிப் போகலாம்.

முதலாளித்துவ சித்தாந்தம் மனித வலுவை வெறுத்து; இயந்திர வலுவை ஆக்கிரமிக்கும் . இங்கே முதலாளித்துவம் மேலோங்கிவிடும்.

ஆக, தாராள மயமாக்கல் மாயைக்குள் வடக்கு, கிழக்குப் பகுதிகள் சிக்குண்டு யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் முடிவுற்றநிலையில் எம்மைப் பாதிக்கும் மேல் விழுங்கிவிட்டது.

மன்னார் எண்ணெய் ஆராய்ச்சியும், காங்கேசன் துறைமுக புனரமைப்பும், திருகோணமலை துறைமுக நிர்மாணிப்பும், வீதி புனரமைப்பும் எமது அபிவிருத்தி என்பது வெறும் மாயை.

முதலாளித்துவம் எமது மூலப்பொருட்களை அபகரிக்கும் தந்திரோபாயமே. இவை குப்பைகளாக அல்லது அத்தியாவசியமற்ற ஆடம்பரங்களாக; பெரும் விலையுடன் மீண்டும் எமது சந்தையை ஆக்கிரமிக்கும்.

எமது புல்மோட்டை இல்மனையிற் 100 ரூபாய்க்கு வாங்கப்பட்டு இலட்ச ரூபாய் பெறுமதியான பளபளக்கும் கண்ணாடியாக எம்மை மீண்டும் வந்துசேரும் இதுவே தாராள மயமாக்கற் சித்தாந்தத்தின் விளைவு.

இந்த மாயையில் இருந்து நாம் எவ்வாறு தப்பிக்கப் போகின்றோமா? இதற்காகச் செயற்படப் போகிறவர்கள் யார்? அதற்கான வலு எம்மிடம் உள்ளதா?

எமது வளங்களை விழுங்கி ஏப்பம்விடத் துடிக்கும் முதலாளித்துவ பல்தேசியக் கம்பனிகளிடம் இருந்து எமது சிறுகைத்தொழில்களையும், சிறுதொழில்களையும் எவ்வாறு பாதுகாக்கப் போகிறோம்?

விரைவாகச்சிந்தித்துச் செயற்படாவிட்டால் முதலாளித்துவம் எம்மை முழுதாக விழுங்கி ஏப்பம் இடுவதை நாம் வேடிக்கை மட்டுமே பார்க்கமுடியும்.

- சுதந்திரன் -

## அன்பு வாசகர்களே!

தங்களது கவிதை, சிறுகதை, ஊர்களின் பெருமைகள் போன்ற ஆக்கங்களை ஏமக்கு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர் குழுவால் தெரிவுசெய்யப்படும் சிறந்த ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

JAFFNA MEDIA SOLUTIONS (PVT) LTD.
The Gateway to the Largest Market...

அனுப்ப வேண்டிய முகவரி:
Jaffna Media Solution (Pvt) Ltd.,
Vaddu. East,
Vaddukkoddai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை உதயதாரகை (MORNING STAR) ஆகும். ஹென்றி மார்ட்டின் என்பவரை ஆசிரியராகக் கொண்டு, 1841ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பத்திரிகை இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை வெள்ளிக்கிழமைகளில் வெளி வந்தது. இப்பத்திரிகையே உலகின் முதலாவது தமிழ்ப்பத்திரிகை என்ற சிறப்பையும் பெற்றுள்ளது.

நவீன அச்சுக் கலையின் முன்னோடி
கரிகணன்
Harikanan (Pvt.) Ltd.
Printers of the North
#424, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
Phone : 0094-21-222 2717 / 21-7397530, Fax : 0094-21-222 2891
www.harikanan.com e-mail: print@harikanan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ஸர் சப்ளயர்ஸ்

# AHIEZER SUPPLIERS

*For Duro PVC Pipe & Fittings. Richardson Bulbs.*
*Seeko Marketting Products. Duroh Detergents Products.*

**கல்சியம் நீக்கி** உங்கள் வீடுகளிற் காணப்படும் Pvc Tankகுகள், குழாய்கள் மற்றும் பிளாஸ்ரிக் பாத்திரங்கள் மாபிள்களிற் பிடித்திருக்கும் கல்சியத்தை இலகுவாக நீக்க "கேட்டு வாங்குங்கள் Duroh கல்சியம் நீக்கி"

**DUROH** Calcium Remover - Bike Wash - Toilet bowi cleaner - Car Wash - Tile Cleaner - Pinol - Dish Wash - glass Cleaner




யாழ்ப்பாணத்தில் அனைத்து ஹாட்வெயார் கடைகளிலும் கேட்டு வாங்குங்கள். வவுனியாவில் வெங்கடேஸ்வரா சுப்பர் மார்க்கட் No:15, Globe Bulding Bazar Street, Vavuniya. T.P: 024 222 2418இல் பெற்றுக்கொள்ள முடியும். Duroh கல்சியம் நீக்கியையும், அதன் ஏனைய உற்பத்திகளையும் பாவித்தபின் தொலைபேசி அழைப்பின்மூலம் கருத்துத் தெரிவிக்கும் ஒவ்வொரு 15 ஆவது அழைப்புக்கும் ஒரு கல்சியம் நீக்கி இலவசம்.










உங்கள் வீடுகளுக்கு ரைல்ஸ் பதிக்கும் எண்ணம் வந்துவிட்டதா?

அப்படியானால் நாடுங்கள் தரமான டிசைன்களை அள்ளி வழங்கும்

## எய்ஸர் சப்ளயர்ஸ்

16 x 16 Tile - 194 ரூபாவிலிருந்து 225 ரூபா வரை
12 x 12 (1 x 1) Tile - 82 ரூபாவிலிருந்து 115 ரூபா வரை
12 x 8 (1x 8) Tile - 50 ரூபாவிலிருந்து 64 ரூபா வரை
8 x 8 Tile - 39 ரூபாவிலிருந்து 50 ரூபா வரை

25 இற்கும் மேற்பட்ட டிசைன்களில் மற்றும் பாத்ரூம் கொமட் வகைகளும், அனைத்து வகையான பாத்ரூம் பிற்றிங்குகளும் மலிவான விலைகளில் ஒரே இடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# AHIEZER SUPPLIERS

இல. 289, பிறவுண் வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம். தொ. இல. 021 510 0700

இச் சஞ்சிகை Jaffna media Solution (Pvt.) Ltd. நிறுவனத்தால் 04.06.2012 அன்று Harikanan (Pvt.) Ltd. நிறுவனத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org